# මැතිවරණ කොමිෂන් සභාව
# தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல் : 011-2868426

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත, රාජගිරිය (10107)
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)

*web : www.slelections.gov.lk e-mail : info@slelections.gov.lk*


| අංකය : எனது இல: LAE/2018/4B | ඔබේ අංකය : உமது இல. | දිනය : திகதி :28.11.2017 |
|---|---|---|

**பதிவுத் தபால்**
**மிக முக்கியம்**

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்,
அனைத்து மாகாண சபைகளினதும் பிரதம செயலாளர்கள்,
தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர்,
அனைத்து மாவட்ட செயலாளர்கள்,
அனைத்து மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்/ மாகாண சபைகளின் அமைச்சுக்களின் செயலாளர்கள்,
அனைத்து மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
அனைத்து திணைக்களத் தலைவர்கள்,
அனைத்து அரச கூட்டுத்தாபன/ நியதிச் சட்ட சபைகளின் தவிசாளர்கள்/ பொது முகாமையாளர்கள்,

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் - 2018**
**அரச மற்றும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளுக்கும் உரித்தான ஆதனங்களை தேர்தல் காலப்பகுதியினுள் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுத்தல் மற்றும் தேர்தல் நடாத்தப்படவுள்ள மாகாணங்களுக்குரிய அலுவலர்கள், ஊழியர்களின் ஆட்சேர்ப்பு/ பதவியுயர்வு/ இடமாற்றம் என்பவற்றை மட்டுப்படுத்தல்.**

உள்ளூர் அதிகார சபைகள் 93 இற்கான நியமனப் பத்திரங்கள் கோரப்படுகின்ற அறிவித்தல்கள் 2017.11.27 ஆந் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன. அன்றைய தினம் தொடக்கம் வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டு முடிவடையும் வரையிலான காலப்பகுதி "தேர்தல் காலக்கெடு" என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதினேழாம் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலக்கெடுவிற்குள் அரசியல் கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர்கள் ஆகியோரை ஊக்குவிப்பதற்கு காரணமாக்கக் கூடிய அல்லது ஏனைய கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளரொருவர் ஆகியோருக்கு பாதிப்பேற்படுத்தத்தக்க விதத்திலான நடவடிக்கைகளுக்காக அரசாங்க ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ள வேண்டுமெனவும் மற்றும் தேர்தல் நடாத்தப்படவுள்ள மாவட்டங்களில் அரசாங்க அலுவலர்கள்/ ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் போன்ற விடயங்களை மட்டுப்படுத்த வேண்டுமெனவும், அரசாங்க ஆதனங்கள் மற்றும் நிகழ்கால நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட பிரதான அலுவலர்கள் அனைவரினதும் கவனத்தை ஈர்ப்பதற்காக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

02. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதினேழாம் திருத்தத்தின் 104(ஆ)(04)(அ) உறுப்புரைக்கமைய, "தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற கால எல்லைக்குள் அரசாங்கத்திற்கோ அல்லது ஏதேனும் ஓர் அரச கூட்டுத்தாபனத்திற்கோ உரித்தான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனமொன்று" ஏதேனும் ஓர் அரசியல் கட்சியையோ அல்லது ஏதேனுமொரு சுயேச்சைக் குழுவையோ ஊக்குவிக்கக்கூடிய அல்லது தடுக்கக் கூடிய பணிகளுக்காக ஏதேனும் ஓர் அரசியல் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பயன்படுத்தப்படுவதை தடை செய்கின்ற அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அல்லது தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு உண்டு. அவ்வுறுப்புரையின் (ஆ) உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற கட்டளைகளைச் செயற்படுத்துதற்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆதனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் கடப்பாடுடையவர்களாக விளங்குகின்றனர்.

03. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரசுக்குச் சொந்தமான அனைத்து மோட்டார் வாகனங்கள், ஜீப் வண்டிகள் போன்ற வாகனங்களையும் ஹெலிகொப்டர், வானூர்திகளையும் பயன்படுத்துவதாக கடந்த தேர்தல் காலங்களிலும் இத்திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. ஆதலால் அரசாங்க வாகனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் இவ்வாகனங்களை எந்தவோர் அரசியல் கட்சியினதும், சுயேச்சைக் குழுவினதும் வேட்பாளர் ஒருவரின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைக்காகப் பயன்படுத்தாத விதத்தில் தேர்தல்கள் கால எல்லைக்குள் வாகன குழாத்தைப் பேணுவதில் முனைப்பான கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். அலுவலர்களுக்கெனக் குறித்தொதுக்கப்பட்டுள்ள (Assigned vehicle) அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் வாடகைக்கு பெறப்பட்டு கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்கள் என்பனவும் இவற்றில் உள்ளடங்குகின்றனவென்பதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். இக்கால எல்லைக்குள் அலுவலர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள (Assigned vehicle) வாகனங்கள் தவிர்ந்த முக்கியமாக குழாத்துக்கு இணைக்கப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் என்பவற்றிற்கான ஓட்டக் குறிப்புக்களை